# DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் வெள்ளிக்கிழமை 06ம் நாள் சாட்சியாகிய சரஸ்வதி(எ)சங்கரி என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரஸ்வதி(எ)சங்கரி | வயது | 30 |
| க/பெ. | சிவக்குமார் | இனம் | பெண் |
| கிராமம் | பொய்ப்பாக்கம் | தொழில் | இல்லத்தரசி |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C.10/2024**

(எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். எதிர்மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி எதிர்மனுதாரர் தரப்பில் 06.06.2025 ம.சா.1</u>**

1. நான் என்ன படிப்பு படித்துள்ளேன் என்றால் பொறியியல் பட்ட படிப்பு படித்துள்ளேன். திருமணத்திற்கு பிறகு நான் எங்கு வசித்து வந்தேன் என்றால் பாலசமுத்திரத்தில் உள்ள எனது மாமியார் வீட்டில் வசித்து வந்தேன். நான் எதிர்மனுதாரர் வீட்டில் இருந்து வெளியே வரும் போது எனது வீட்டில் போட்ட நகைகள் மற்றும் எதிர்மனுதாரர் வீட்டில் போட்ட நகைகள் எடுத்து வந்துவிட்டேன் என்றால் இல்லை.

2. திருமணமாகி எத்தனை மாதங்கள் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வசித்து வந்தேன் என்றால் 9 மாதங்கள். எதிர்மனுதாரர் எங்கு வேலை செய்கிறார் என்றால் சென்னை மவுண்ட் ரோட்டில் உள்ள பஸ்வொர்க் என்ற நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். எதிர்மனுதாரர் சென்னையில் தங்கியுள்ளாரா என்றால் ஆமாம். எனது கணவர் சென்னையில் தங்கியுள்ள இடத்திற்கு நான் சென்று உள்ளேனா என்றால் இல்லை.

3. மனு மற்றும் முதன்மை சாட்சியத்தில் தெரிவித்துள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது கணவருக்கு குடிப்பழக்கம் உள்ளதாக பொய்யாக தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு குடிப்பழக்கம் உள்ளது. எனக்கு எந்த தேதியில் குழந்தை பிறந்தது என்றால் 2022 ஜனவரி மாதம் அடுக்கம்பாரை அரசு மருத்துவமனையில் குழந்தை பிறந்தது. எனக்கு குழந்தை பிறந்த

விவரத்தை எதிர்மனுதாருக்கு தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது சித்தி மூலம் தகவல் சொன்னார்கள்.

4. எதிர்மனுதாரர் குழந்தையை பார்க்க வந்தபோது அவரை அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. அவர் குழந்தையை பார்த்தார். எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண்.34/2024 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கிற்கு பிறகுதான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் அந்த வழக்கில் சமரச மையத்தில் பேசிய போது சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்று தெரிவித்தேன் என்றால் சரிதான்.

5. நான் எந்த தேதியில் எதிர்மனுதாரர் வீட்டில் இருந்து வெளியே வந்தேன் என்றால் 16.11.2021. எனது முதன்மை சாட்சியத்தில் 20.10.2021ம் தேதி வீட்டை விட்டு வெளியே வந்தேன் என்றால் சரிதான். மீண்டும் சென்றபோது சண்டைபோட்டு அனுப்பிவிட்டார்கள். எனது முதன்மை சாட்சியம் பத்தி 4ல் 20.10.2021ம் தேதி என்னை வீட்டை விட்டு வெளியே தள்ளியதாக தெரிவித்துள்ளேனா என்றால் சரிதான். மனுவில் பத்தி 5ல் 26.10.2021ம் தேதி என்னை வீட்டை விட்டு வெளியேற்றியதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

6. 29.10.2021ம் தேதி எனது வீட்டில் சமாதானம் பேச வந்ததாக மனு மற்றும் எனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். 29ம் தேதி எனது உறவினர்களை எதிர்மனுதாரர் திட்டி அனுப்பியதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அக்டோபர் மாதம் எனது கணவர் ஊரில் இல்லை என்றால் சரியல்ல. எனது கணவர் வேலையில் சென்னையில் இருந்தார் என்றால் சரிதான்.

7. எதிர்மனுதாரர் 20 சவரன் நகையை அடமானம் வைத்ததாக தெரிவித்துள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 28.02.2025ம் தேதி எனது குடும்பத்தை சேர்ந்தவர்கள் எதிர்மனுதாரரை நீதிமன்ற வளாகத்தில் தாக்கினார்கள் என்றால் இல்லை. நான் எந்த நேரத்தில் எதிர்மனுதாரர் வீட்டை விட்டு வெளியேறினேன் என்றால் பிற்பகல் 3 மணி.

8. நான் 2021 நவம்பர் மாதம் வீட்டை விட்டு வெளியே வந்ததாக எனது மனு மற்றும் சாட்சியத்தில் தெரிவித்துள்ளேனா என்றால் சாட்சியத்தில் தேதி தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. மனு மற்றும் முதன்மை சாட்சியத்தில் வெவ்வேறு தேதிகள்

குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடைபெறவில்லை என்பதால்தான் தேதி தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

9. எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ விருப்பமாக இருந்தபோதும் நான் காரணம் இல்லாமல் மறுத்து வருகிறேன் என்றால் மூன்ரை வருடமாக எதிர்மனுதாரர் என்னை, குழந்தையை வந்து பார்க்கவில்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகுதான் வந்துள்ளார். நான் சேர்ந்து வாழ சூழ்நிலை இல்லை என்பதால் சேர்ந்து வாழவில்லை. மனுவில் நகையை அடகுவைத்ததால் பிரச்சனை ஏற்பட்டது என்றும் முதன்மை சாட்சியத்தில் நகையை கேட்டதால் பிரச்சனை ஏற்பட்டது என்று மாறுபட்டு தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. நகையை கேட்டுதான் சண்டை போட்டார்.

10. நான் பொய் சொல்வதால்தான் மனு மற்றும் சாட்சியத்தில் வேறுபட்டு தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருடன் மூன்று மாதம்தான் சேர்ந்து வசித்து வந்தேன் என்றால் சரியல்ல. திருமண செலவுகளை யார் செய்தது என்றால் எனது பெற்றோர்கள் தான் செய்தார்கள். நான் அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சீர்வரிசை, நகைகளுக்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது சீர்வரிசை நகைகள் அனைத்தும் என்னிடம் தான் உள்ளது என்றால் இல்லை. நான் பணம் பறிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

**மறுவிசாரணை** இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.